1982 பிப்ரவரி 11] (திரு. ப. குழந்தைவேலு)

அவர்கள் அலுவலர்கள் பார்த்த பின்னால்தான், இங்கேதான், அதுவும் '' தி ஒன்லி ஸ்டேட் '' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். Tamil Nadu is the only State where NRDP work is being done என்று சொல்லி அவர்கள் இதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இதை நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், இத்திட்டத்திற்காக 2.83 கோடி மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு அதிகமான புள்ளி விவரம் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அந்த அளவிற்குப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், எந்தத் திட்டத்திலும் ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். திரு வேங்கடம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், எந்தத்திட்டத்திலும் குறைபாடுகள் இருக்கலாம். அது இயற்கைதான். ஆகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டுமல்ல, எந்த ஆட்சி நடைபெற்றாலும், எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறபோது ஒரு சில தவறுகள் ஏற்படத்தான் செய்யும். அந்தத் தவறுகளைத் திருத்தி நல்ல முறையிலே, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது ஒரு அரசின் கண்காணிப்பாக இருக்க வேண்டும். அதைத் தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

வசிஷ்ட நதியின் குறுக்கே பாலம்.

*வினா எண். 147—திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலுள்ள பெரிய கல்வராயன்மலை போகும் வழியிலுள்ள செல்லியம்பாளையத்திற்கும் இராமநாய்க்கன்பாளையத்திற்கும் இடையில் வசிஷ்ட நதி ஆற்றில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அரசு அதுபற்றி பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) தகுந்த தருணத்தில் பரிசீலனை செய்யப்படும்.